வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – செங்கேணி பழனி

தேதி 14.01.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

இந்திய புள்ளியியல் சேவை பயிற்சி அதிகாரிகள் குழு இன்று குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்முவை குடியரசு தலைவர் மாளிகையில் சந்தித்தனர்.

துல்லியமான வானிலை அறிவிப்பை ஊக்கப்படுத்தும் நோக்கில் **மிஷன் மவுசம்** இயக்கத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொடக்கி வைத்தார்.

மகரசங்கராந்தி முதல் அமிர்த ஸ்நானத்தின் போது திரிவேணி சங்கமத்தில் இதுவரை 1 கோடியே 60 லட்சம் பேர் புனித நீராடியுள்ளனர்.

புதுச்சேரியில் தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகை சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

முர்மு (9)

இந்திய புள்ளியியல் சேவை பயிற்சி அதிகாரிகள் குழு இன்று குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்முவை குடியரசு தலைவர் மாளிகையில் சந்தித்தனர். பயிற்சி அதிகாரிகள் இடையே உரையாற்றிய குடியரசு தலைவர், புள்ளியல் அம்சங்கள், அளவு சார் தொழில்நுட்பங்கள் ஆகியவை கொள்கை முடிவுகளுக்கு அனுபவ அடிப்படையிலான, அடித் தளத்தை வழங்குவதாக கூறினார். சுகாதாரம், கல்வி, மக்கள் தொகை அளவு, வேலை வாய்ப்பு பற்றிய தரவுகளை சேகரிக்க அரசு தேசிய புள்ளி விவர

அமைப்புகளை நம்பி உள்ளது என்றும், இந்த தரவுகள் திட்டங்களை வகுப்பதற்கான அடிப்படையாக விளங்குகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

*மிஷன் மவுசம்* 1 (18)

நாட்டில் நிலவும் தட்ப வெப்ப நிலை, துல்லியமான வானிலை அறிவிப்பை ஊக்கப்படுத்தும் நோக்கில் **மிஷன் மவுசம்** இயக்கத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொடக்கி வைத்தார். புதுடெல்லியில் நடைபெற்ற இந்திய வானிலை ஆய்வுத் துறையின் 150 ஆவது ஆண்டு தின நிகழ்ச்சியில் அவர் இன்று கலந்து கொண்டார். அப்போது பேசிய அவர், இந்த **மிஷன் மவுசம்** திட்டம் எதிர்காலத்தில் வானிலையை கணிப்பதற்கு உகந்ததாக இருக்கும் என்று கூறினார். நாட்டின் நவீன அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பயணத்தில் 150 ஆண்டு காலம் இந்திய வானிலை ஆய்வுத் துறை சிறப்பாக பணியாற்றி உள்ளதாக அவர் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியின் போது நினைவு நாணயத்தையும், 2047 ஆம் ஆண்டில் இந்திய வானிலை ஆய்வுத் துறையின் தொலைநோக்கு பார்வை குறித்த ஆவணத்தையும் பிரதமர் வெளியிட்டார். வானிலையின் மேம்பட்ட தகவல்களை அறியவும், காற்றின் தரம் குறித்த தரவுகளை தெரிந்து கொள்ளவும் இந்த **மிஷன் மவுசம்** திட்டம் நோக்கமாக கொண்டு தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் எதிர்வரும் 10 நாட்களுக்கான வானிலை தகவல்களை எவராலும், எந்த நேரத்திலும் தெரிந்து கொள்ள முடியும் என்று பிரதமர் கூறினார். மேலும், இயற்கை பேரிடர்களின் தாக்கத்தை குறைக்க வானிலை ஆய்வின் செயல்திறனை

*மிஷன் மவுசம்* 2 (9)

அதிகரிக்க வேண்டும் என்று பிரதமர் வலியுறுத்தினார். இயற்கை பேரிடர்களின் போது மற்ற நாடுகளுக்கு உதவ விஷ்வபந்துவாக இந்தியா எப்போதும் முதலில் இருக்கிறது என்று திரு மோடி கூறினார். உலகளாவிய சேவை மற்றும் பாதுகாப்பில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கும் என்றும்

அவர் நம்பிக்கை தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய மத்திய புவி அறிவியல் துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், இந்தியாவின் வானிலை முன்னறிவிப்ப திறன்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை வலியுறுத்தினார். கடந்த 10 ஆண்டுகளில் வானிலை முன்னறிவிப்பு துல்லியத்தில் 50 சதவிகிதம் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

*ஜெய்சங்கர்* (13)

அனைவருக்கும் அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்ற சூழலை உலகிற்கு எடுத்துக் கூறும் நாடாக இந்தியா திகழ்கிறது என்று மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். ஸ்பெயினில் இன்று இந்திய வம்சாவளியினரிடையே உரையாற்றிய அவர், உலகில் சவாலான தருணங்களில் இந்தியா உதவி வருவது குறித்து சுட்டிக்காட்டினார். இதன் மூலம் வளர்ச்சி அடைந்து வரும் இந்தியாவின் நிலையை அவர் எடுத்துரைத்தார். ரஷ்யா-உக்ரேன் அல்லது இஸ்ரேல்-ஈரான் ஆகிய நாடுகளுடன் தற்போது சில நாடுகளே பேச்சு நடத்தி வரும் நிலையில், பிரதமர் திரு நரேந்திர மோடி இந்த அனைத்து நாடுகளுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதாக கூறினார். குவாட் மற்றும் பிரிக்ஸ் அமைப்பில் இந்தியா உறுப்பு நாடாக இடம் பெற்றிருப்பது தனித்துவம் மிக்கது என்று அவர் தெரிவித்தார். இந்தியா-ஸ்பெயின் இடையேயான உறவுகள் சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

*பரிக்ஷா பே சர்ச்சா* (12)

3.25 கோடி மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் பிரதமர் திரு நரேந்திர மோடியுடன் இந்த ஆண்டுக்கான பரிக்ஷா பே சர்ச்சா நிகழ்ச்சியில் பங்கேற்க பதிவு செய்துள்ளனர். மத்திய கல்வி அமைச்சகத்தின் அறிக்கையின்படி, இது ஒரு நாடு தழுவிய இயக்கம் என்றும், மாணவர்களின் பங்கேற்பு குறிப்பிடத்தக்க மேம்பாட்டை அடைந்துள்ளது

என்றும் தெரிவித்துள்ளது. பிரதமர் திரு மோடியின் தனித்துவமான இந்த முன் முயற்சி, தேர்வு தொடர்பான மன அழுத்தத்தை குறைத்து, தேர்வு அனுபவத்தை கொண்டாடும் விதமாக மாற்றுவதை நோக்கமாக கொண்டுள்ளது. இந்நிகழ்வின் போது, பிரதமர் திரு நரேந்திர மோடி மாணவர்களின் கேள்விக்கு பதில் அளிக்க உள்ளார். மேலும், தேர்வுகளை நம்பிக்கையுடனும், நேர்மறையான மன நிலையுடனும் அணுகுவதற்கான ஆலோசனைகளை அவர் வழங்க உள்ளார்.

*மகரசங்கராந்தி* (12)

பிரயாக்ராஜில் மகரசங்கராந்தி முதல் அமிர்த ஸ்நானத்தின் போது திரிவேணி சங்கமத்தில் இன்று மதியம் வரை 1 கோடியே 60 லட்சம் பேர் புனித நீராடியுள்ளனர். இந்த அமிர்த ஸ்நானத்தில் லட்சக்கணக்கான பக்தர்கள் மற்றும் சாதுக்கள் கலந்து கொள்கின்றனர். புனித நீராடலுக்கு பிறகு பக்தர்கள் கிரிவலம் சென்று வழிபாடு செய்கின்றனர். இன்று காலை நடைபெற்ற கங்கா ஆரத்தியிலும் மக்கள் திரளாக கலந்து கொண்டனர். இந்த மகா கும்பமேளா அடுத்த மாதம் 26 ஆம் தேதியான மகா சிவராத்திரி வரை நடைபெறுகிறது. மகர சங்கராந்தி பண்டிகையை முன்னிட்டு முதல் அமிர்த ஸ்நானத்தில் பங்கேற்ற பக்தர்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்தார். மகா கும்பமேளாவின் காட்சிகளை சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்ட பிரதமர் இந்த மகா கும்பமேளா பக்தி மற்றும் ஆன்மீகத்தின் உண்மையான பிரதிபலிப்பு என்று பதிவிட்டுள்ளார்.

*வாழ்த்து* (6)

தை பொங்கல், மகர சங்கராந்தி, பிஹூ மற்றும் உத்தராயணத்தை முன்னிட்டு பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்த அறுவடை விழாக்கள் அனைவரின் வாழ்விலும் வெற்றியையும், மகிழ்ச்சியையும் தரும் என்று சமூக ஊடகப்பதிவில் அவர் கூறியுள்ளார். மேலும், இந்த பண்டிகைகள் மகிழ்ச்சி மற்றும் ஒற்றுமையை மேம்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

*மகரஜோதி (7)*

கேரளாவில் இன்று மாலை 6.45 மணியளவில் சபரிமலை ஐயப்பன் கோவிலில் ஆயிரக்கணக்கான ஐயப்ப பக்தர்கள் மகரஜோதி தரிசனம் செய்தனர். 6.30 மணிக்கு ஐயப்பனுக்கு திருவாபரணம் அணிவிக்கப்பட்டவுடன் பொன்னம்பல மேட்டில் ஜோதி தரிசனம் நடைபெற்றது. மகர சங்கராந்தி அன்று ஒவ்வொரு வருடமும், மகர ஜோதியாக ஐயப்பன் தனது பக்தர்களை ஆசிர்வதிப்பதற்காக தன்னை ஒரு ஜோதியாக வெளிகாட்டுவதாக நம்பப்படுகிறது. திருவாபரணத்துடன் ஐயப்பனை இன்று முதல் 18 ஆம் தேதி வரை தரிசிக்கலாம் என்றும், 20 ஆம் தேதி காலை 6.30 மணிக்கு பந்தளராஜ குடும்பத்தினர் சுவாமி தரிசனம் செய்த பின்னர் கோவில் நடை அடைக்கப்பட்டு, மகர விளக்கு பூஜை நிறைவடையும்.

*படைவீரர்கள் (5)*

நமது நாட்டை பாதுகாப்பதற்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்த துணிச்சலான வீரர்களுக்கு நமது நன்றியை தெரிவித்த பிரதமர், இன்று முன்னாள் படை வீரர்கள் தினத்தை முன்னிட்டு, நமது முன்னாள் வீரர்கள் நாயகர்கள் என்றும், தேசபக்தியில் நீடித்த அடையாளங்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

*புதுச்சேரி-பொங்கல்(8)*

புதுச்சேரியில் தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையை அனைவரும் புத்தாடை உடுத்தி, வாசலில் வண்ண கோலமிட்டு, புது பானையில் பொங்கல் வைத்து, சிறப்பாக கொண்டாடினர். தமிழர்களின் பாரம்பரிய பண்டிகையான பொங்கல் திருநாள் 4 நாட்கள் கொண்டாடப்படுகிறது. நாளை 2 ஆம் நாளான மாட்டுப்பொங்கலை முன்னிட்டு உழவு தொழிலுக்கு உறுதுணையாக உள்ள கால்நடைகளை அலங்கரித்து, அவைகளுக்கு

உணவு கொடுத்து கொண்டாடுவர். மேலும், 3 ஆம் நாளான கானும் பொங்கல் பண்டிகையன்று பெரியோர்களை சந்தித்து ஆசி பெறுவர்.

திருவள்ளுவர் தினம் (7)

திருவள்ளுவர் தினம் நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி, புதுச்சேரி மற்றும் காரைக்காலில் உள்ள மதுக்கடைகள், கள்ளுக்கடைகள், ரெஸ்ட்ரோ பார்கள், உணவு விடுதிகளில் உள்ள மதுபார்கள் ஆகியவற்றை மூட வேண்டும் என்று புதுச்சேரி அரசு கலால் துறை உத்தரவிட்டுள்ளது. மேலும், கள்ளத்தனமாக அரசின் உத்தரவை மீறி மது பானங்களை விற்பனை செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆரோவில் பொங்கல் (8)

புதுச்சேரியை அடுத்த ஆரோவில்லில் நடைபெற்ற பொங்கல் விழாவில் ஏராளமான வெளிநாட்டினர் தமிழர்களின் பாரம்பரிய உடையணிந்து பொங்கலிட்டு, கும்மியடித்து உற்சாகமாக கலந்து கொண்டனர். ஆரோவில் அறக்கட்டளை சார்பாக, ஆரோவில் மோகனம் கலாச்சார பண்பாட்டு மையத்தில் பொங்கல் விழா இன்று கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு, மல்லர் கம்பம், கயிறு ஏறுதல், மயிலாட்டம், ஒயிலாட்டம் போன்ற பல்வேறு பாரம்பரிய நிகழ்ச்சிகளை வெளிநாட்டினர் உற்சாகமாக ரசித்தனர்.

ஏஐபிஓசி (15)

அகில இந்திய தலைமை அதிகாரிகள் மாநாட்டின் 85 ஆவது அமர்வு பீகாரில் உள்ள பாட்னாவில் ஜனவரி 20 மற்றும் 21 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது. AIPOC என்பது இந்தியாவில் உள்ள சட்டமன்றங்களின் ஓர் உச்ச அமைப்பாகும். இது, மக்களவையின் வழிகாட்டுதலின் கீழ் அனைத்து சட்டமன்றங்கள் மற்றும் கவுன்சில்கள் இடையே சிறந்த நடைமுறைகள் மற்றும் புதுமையான யோசனைகளை

பகிர்ந்து கொள்வதற்கான ஒரு தளமாக அமைகிறது. இந்திய அரசியல் அமைப்பின் 75 ஆவது புகழ் பெற்ற பயணத்தை அடிப்படையாக கொண்டு, இந்நிகழ்ச்சி நடைபெற உள்ளதாக பீகார் சட்டப்பேரவை தலைவர் திரு நந்துகிஷோர் யாதவ் தெரிவித்தார். அரசியல் அமைப்பை ஏற்றுக் கொண்டதன் 75 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி, அரசியல் அமைப்பு விழுமியங்களை மேம்படுத்துவது, பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்களின் பங்களிப்பு குறித்து இந்த அமைப்பின் பிரதிநிதிகள் விவாதிப்பார்கள் என்று திரு யாதவ் கூறினார். மேலும், இந்நிகழ்ச்சிக்கு மக்களவை சபாநாயகர் திரு ஓம்பிர்லா தலைமை தாங்க உள்ளார்.